I Additional District Court, Thoothukudi.

O.S.No.124/2024 நாள் : 10.02.2026

வா.சா.1– திருமதி. வெற்றிக்கொடி.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

வா.சா.ஆ 8 பாக விடுதலை பத்திரத்தை செல்லாது என்று பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதி பாகம்பிரித்து தருவதாக சொல்லி அழைத்துச் சென்று பாக விடுதலை பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டார். நாங்கள் கோவையிலிருந்துதான் வந்தோம். பாக பிரிவினை பத்திரம் பதிவு செய்யத்தான் நாங்கள் வந்தோம். என் தகப்பனார் சொத்தில் எனக்கு 1/6 பாக பங்கு வரவேண்டுமென்று பேசிக் கொண்டு வந்தோம். தற்போது எனக்கு 1/4 பங்கு வரவேண்டும். வா.சா.ஆ 8 க்கு முன்பாக என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எங்களுக்கு எவ்வளவு பங்கு உள்ளது என்று அளந்து பிரிக்கவில்லை. அதனால் எந்த எந்த சொத்து யார் யாருக்கு என்று பிரிக்கப்படவில்லை. எனக்கு எந்த பாகம் பத்திரத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்று நான் கேட்கவில்லை. என் தாயாரிடமும் கேட்கவில்லை. பத்திரப்படி எனக்கு எந்த பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதியிடம் கேட்டேன் அவர் பதில் சொல்லவில்லை. வா.சா.ஆ 8 பதிவு செய்து எத்தனை மாதங்கள் கழித்து என் பாகத்தை காட்டுமாறு கேட்டேன் என்றால் என்னால் சொல்லமுடியாது. பாக பிரிவினை பத்திரம் என்று சொன்னதால் என் பாகத்திற்குண்டான சொத்தை நான் எடுத்துக் கொண்டேனா என்றால் என் பாகம் எதுவென்று காட்டவில்லை. வா.சா.ஆ 8 ன் நகலை எடுத்து பார்த்தோம். அதற்கு பிறகுதான் பாக விடுதலை பத்திரம் என்பது தெரிய வந்தது. பாக பத்திரம் என்று நினைத்து என் பாகத்திற்கு பட்டா மாற்ற விண்ணப்பம் கொடுத்தேனா என்றால் எந்த பாகம் என்று தெரியாமல் விண்ணப்பம் கொடுக்கவில்லை. என் தாயாரோ,

பிரதிவாதியோ எங்களை ஏமாற்றி பாக விடுதலை பத்திரம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் மூவருக்கும் சேர்ந்து ரூபாய் 10 லட்சம் பெற்றுக் கொண்டுதான் நாங்கள் வா.சா.ஆ 8 எழுதிக் கொடுத்தோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 8 பதிவு செய்யப்பட்ட சமயத்தில் எங்களுக்கும், பிரதிவாதிக்கும் கருத்துவேறுபாடு இல்லை. என் தாயார் இறக்கும்வரையில் எங்களுக்குள் எந்தவித பிரச்சனையும் இல்லை. என் தம்பி முத்துக்குமார் இறக்கும்வரையிலும் எங்களுக்குள் எந்த பிரச்சனையும் இல்லை. என்னை உள்ளூரில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். என் தம்பி முத்துககுமார் இறந்தபிறகுதான் எங்களுக்கும், பிரதிவாதிக்கும் தனிப்பட்ட குடும்ப பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. சொத்து பிரச்சனை ஏற்பட்டது. அவர் இறக்காமல் இருந்ததிருந்தால் சொத்து பிரச்சனை ஏற்பட்டிருக்காது. வா.சா.ஆ 8 தேதியிலிருந்து 10 ஆண்டுகளுக்கு பிறகுதான் இந்த வழக்கை தாக்கல் செய்தோம். வா.சா.ஆ 8 குறித்து 2020 ல் என் தம்பி முத்துக்குமார் இறந்தபோதுதான் தெரியவந்தது. வா.சா,ஆ.9 உயில் எழுதிக் வைக்கும்போது என் தம்பி உயிருடன் இருந்ததால் அவருடைய பாகம் குறித்து உயில் எழுதி வைக்க என் தாயாருக்கு உரிமையில்லை என்பதால் அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்கிறேன். வா.சா.ஆ 8 எழுதும்போது என் தாயார் அருகில் இருந்தார். வாசா.ஆ 9 உயிலும் அதே தேதியில்தான் எழுதப்பட்டது என்றால் உயில் எழுதப்பட்டது எங்களுக்கு தெரியாது. இரண்டு ஆவணங்களும் மதியம் 1 மணி முதல் 2 மணிக்குள் பதிவிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஒரு பத்திரம் பற்றிதான் தெரியும். இரண்டு பத்திரங்களிலும் என்மாமா ஐசக் மோகன்தாஸ், சித்தப்பா சீனிவாசன் ஆகியோர் சாட்சி கையொப்பமிட்டுள்ளார்கள் என்றால் ஒரு பத்திரத்தில்

கையொப்பமிட்டதுதான் எனக்குத் தெரியும். இரண்டு பத்திரங்களும் ஒரே நேரத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. இரண்டு பத்திரங்களையும் பதிவு செய்ய நாங்களும், என் தாயாரும், பிரதிவாதியும் ஒன்றாகதான் வந்தோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 8 மற்றும் 9 பத்திரங்கள் பிறப்பிக்கும்முன்பு என் தாயார் தலையில் நடந்த குடும்ப ஏற்பாட்டின்படி குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆண் வாரிசாகிய பிரதிவாதிக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று பேசித்தான் வா.சா.ஆ 8 மற்றும் 9 எழுதப்பட்டது என்றால் சரியல்ல. கோவையில் நடந்த குடும்ப ஏற்பாட்டின்படிதான் மேற்படி இரண்டு பத்திரங்களையும் பிரதிவாதி பெயருக்கு எழுதிக் கொடுத்தோம் என்றால் சரியல்ல. முத்துக்குமார் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் நாங்களும் சம்மதித்துதான் முத்துக்குமார் பங்கையும் சேர்த்து என் தாயார் பிரதிவாதிக்கு எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. அதனால் ஏற்கனவே எங்கள் பாகத்தை விடுதலை செய்துகொடுத்துவிட்டதால் தாவா சொத்துக்களில் எங்களுக்கு பாகபிரிவினை கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா 2ம் தபசில் சொத்தில் பிரதிவாதி வீடு கட்டியுள்ளார். பிரதிவாதி தன் பெயரில் வரிவிதிப்பையும் மாற்றிக் கொண்டார். அதை ரத்து செய்ய நாங்கள் மனு கொடுத்திருந்தோம். பிரதிவாதி எங்கள் மீது அ.வ.எண்.185/2023 நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாவா 2ம் தபசில் சொத்து குறித்து திருச்செந்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். தாவா 1, 3, 4, 5 தபசில் சொத்துக்கள் குறித்து எங்கள் மீது பிரதிவாதி அ.வ.எண்.41/2024 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்குகள் நிலுவையில் உள்ளன. பிராது 6, 7, 8 தபசில் சொத்துக்கள் பிரதிவாதி எங்கள் மீது சாத்தான்குளம் நீதிமன்றத்தில் அ.வ.எண்.9/2024 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் பி.சா.1

ஆக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதிக்கு நாங்கள் இடையூறு செய்யக்கூடாது என்று தீர்ப்பளித்தார்கள். அதன்மீது மேல்முறையீட்டு வழக்கு எண் A.S.42/2025 தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்குகளை பிரதிவாதி எங்கள்மீது தாக்கல் செய்ததால் பதில் நடவடிக்கையாக நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1, 3 வாதிகள் சேர்ந்துதான் என்னை அனுப்பினார்கள். பிரதிவாதிமீது உள்ள தனிப்பட்ட விரோதம் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரியல்ல. அதனால்தான் 1, 3 வாதிகள் சாட்சி சொல்ல வரவில்லை என்றால் அவர்கள்தான் என்னை அனுப்பினார்கள். தாவா சொத்து பிரதிவாதிக்கு தனித்து பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.10 17:23:53 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.